பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 04 2024 **FRIDAY** 7 15 **PM**

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக இன்று நடைபெற்ற வாக்குப்பதிவு அமைதியான முறையில் நிறைவடைந்தது.

- இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான புதிய திட்டங்களை பிஜேபி அரசு நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சி பொறுப்பேற்றால் அக்னிவீர் திட்டம் ரத்து செய்யப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

- ஹமாஸ் அமைப்புடனான போரை முடிவுக்கு கொண்டு வர, இஸ்ரேலுடன் பேச்சு நடத்துவதற்கு உயர்நிலை குழு ஒன்றை எகிப்து அனுப்பியுள்ளது.

- உலக கோப்பைக்கான Wushu தகுதிச் சுற்றுப் போட்டியில், இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது..

>>>><<<<

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக, 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட 88 தொகுதிகளில் இன்று நடைபெற்ற வாக்குப்பதிவு அமைதியாக நிறைவடைந்தது.

இந்த தேர்தலில் 64 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகபட்சமாக திரிபுரா மாநிலத்தில் 77 புள்ளி ஐந்து மூன்று சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக உத்தரபிரதேசத்தில் 52 புள்ளி ஏழு நான்கு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

மணிப்பூரில் 76 புள்ளி பூஜ்யம் ஆறு சதவீதமும்,

சத்திஷ்கரில் 72 புள்ளி ஒன்று மூன்று சதவீதமும்,

மேற்குவங்கத்தில் 71 புள்ளி எட்டு நான்கு சதவீதமும்

அஸ்ஸாமில் 70 புள்ளி ஆறு ஆறு சதவீதமும்,

ஜம்மு காஷ்மீரில் 67 புள்ளி இரண்டு இரண்டு சதவீதமும்,

கர்நாடகாவில் 63 புள்ளி ஒன்பது பூஜ்யம் சதவீதமும்,

கேரளாவில் 63 புள்ளி ஆறு ஏழு சதவீதமும்

ராஜஸ்தானில் 59 புள்ளி ஒன்று ஒன்பது சதவீதமும்,

மத்தியப்பிரசேதத்தில் 54 புள்ளி எட்டு மூன்று சதவீதமும்,

மஹாராஷ்ட்ராவில் 53 புள்ளி ஐந்து ஒன்று சதவீதமும்,

பீகாரில் 53 புள்ளி பூஜ்யம் மூன்று சதவீதமும்

வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தலுடன் ராஜஸ்தானில் பஹியோதோரா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 73 புள்ளி இரண்டு ஐந்து சதவீத வாக்குகள் பதிவானதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இந்த தொகுதிகளில் அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மக்களவைக்கு நான்காம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 29ஆம் தேதி கடைசி நாளாகும்.

மக்களவைக்கு, ஐந்தாம் கட்டமாக அடுத்த மாதம் 20ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 49 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியுள்ளது.

மனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் 3ஆம் தேதி கடைசி நாளாகும்.

இந்நிலையில், தமிழகத்தில் கடந்த 19ஆம் தேதி நடந்து முடிந்த தேர்தலை அடுத்து, வாக்கு எண்ணிக்கை தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து, தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ, அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>>>><<<<

குஜராத் மாநிலம், சூரத் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வேட்புமனு நிராகரிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. Nilesh Kumbhani கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவருடைய வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதால், சூரத் தொகுதியில் பிஜேபி சார்பில் போட்டியிட்ட திரு. முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், வேட்புமனுவை தாக்கல் செய்யும் போது, அக்கறையின்றி செயல்பட்ட காரணத்திற்காக அவரை ஆறு ஆண்டுகளுக்கு கட்சியிலிருந்து நீக்கி காங்கிரஸ் மேலிடம் நடவடிக்கை எடுத்துள்ளது.

>>>><<<<

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான புதிய திட்டங்களை பிஜேபி அரசு நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம், Malda-வில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில் இளைஞர்களின் மேம்பாட்டிற்கான அனைத்து கதவுகளும் மூடப்பட்டிருப்பதாக குறை கூறினார்.

மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்தி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

தொடர்ந்து பீகார் மாநிலம், Araria, Munger ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் பங்கேற்று பேசிய அவர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாக கூறினார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மக்களை வாக்களிக்க விடாமல், வாக்குச்சாவடிகளை சூறையாடுதல் போன்ற வன்முறைகளில் கட்சியினர் ஈடுபட்டதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

கர்நாடக மாநிலம், விஜயபுரா என்னும் இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால், அனைத்து பட்டதாரிகளுக்கும் தனியார் நிறுவனங்கள் அல்லது அரசு அலுவலகங்களில் ஓராண்டு பயிற்சி அளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கொண்டு வந்துள்ள அக்னிவீர் திட்டம் ரத்து செய்யப்பட்டு, ராணுவத்தில் அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்றும், மாநிலங்களுக்கு அதிக வரிப் பகிர்வு கிடைக்கும் வகையில், சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ராகுல்காந்தி தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணியை ஜூன் மாதம் தொடங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு. கங்கா பூர்வாலா, நீதிபதி திரு. சத்யநாராயண பிரசாத் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

சதுப்பு நிலங்களை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பணியின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்காக நிபுணர்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளவும் நீதிபதிகள் அனுமதி அளித்துள்ளனர்.

முன்னதாக தமிழக அரசு தரப்பில், முன்னோடித் திட்டமாக திருவள்ளூர் மாவட்டத்தில் சதுப்பு நிலங்கள் அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் உள்ள சதுப்பு நிலங்களை பாதுகாப்பது தொடர்பாக, உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்தது.

>>>><<<<

காஸாவில் ஹமாஸ் அமைப்புடன் நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர, இஸ்ரேலுடன் பேச்சு நடத்துவதற்காக உயர்நிலை குழு ஒன்றை எகிப்து அனுப்பியுள்ளது.

எகிப்து உளவுத்துறை உயரதிகாரி திரு. Abbas Kamel தலைமையிலான குழுவினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹமாஸ் அமைப்பினரால் பிணைக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களை பரிமாறிக் கொள்வது, பாலஸ்தீனத்திலிருந்து குடிபெயர்ந்தவர்களை மீண்டும் அனுப்பி வைப்பது உள்ளிட்டவை குறித்து எகிப்து குழு பேச்சு நடத்தும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையே, இஸ்ரேல் – பாலஸ்தீன எல்லைப்பகுதியில் லெபனான் தீவிரவாத குழுவான Hezbollah அமைப்பினர், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை மற்றும் ஆயுத தாக்குதலை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

இலங்கை சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாக பொறுப்புகளை ரஷ்ய நிறுவனத்துடன் இணைந்து, இந்திய நிறுவனம் ஒன்று மேற்கொள்ளவிருக்கிறது.

இலங்கை தீவின் தெற்கு பிராந்தியத்திற்கான இந்த பொறுப்புகளை மாற்ற அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ரஷ்ய நிறுவனத்துடன், இந்தியாவின் Shaurya Auronautics நிறுவனம் இணைந்து இலங்கை விமான நிலைய நிர்வாக பொறுப்புகளை அடுத்த 30 ஆண்டுகளுக்கு கையாளும் என அந்நாட்டு அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

தான்சானியாவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் 155 பேர் உயிரிழந்தனர்.

இந்த கனமழை வெள்ளம் குறித்து அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்த பிரதமர் திரு. Kassim Majaliwa, அடுத்த சில தினங்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்த மழையால் சாலைகள், பாலங்கள், ரயில் நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 51 ஆயிரம் வீடுகள் மழையால் சேதமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ள பாதிப்பு காரணமாக, பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

மீட்புக் குழுவினர் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்ட பகுதிகளில் தேவையான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் திரு. Kassim Majaliwa தெரிவித்தார்.

>>>><<<<

சீன தற்காப்புக்கலையான Wushu உலக கோப்பை தகுதிச் சுற்றுப் போட்டியில், இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் Jiangsu–வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற எட்டு பேர், உலக கோப்பை போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டி ஸ்பெயினில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

>>>><<<<

உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் தீபிகா குமாரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் Shanghai-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், தென்கொரியாவின் Jeon Hun Young–ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Jyothi Surekha Vennam – Abishek Varma இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 155-151 என்ற புள்ளிக்கணக்கில் மெக்ஸிக்கோவின் Andrea Becerra – Lot Maximo Mendez Ortiz இணையை வென்றது.

>>>><<<<

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rutuja Bhosale - நியூஸிலாந்தின் Paige Hourigan இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் நித்யஸ்ரீ சுமதி சிவன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-13, 21-16 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Rachel Choong-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் நிதிஷ்குமார் - துளசிமதி முருகேசன் இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

>>>><<<<

துபாயில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா நேற்று 4 தங்கப்பதக்கங்களை வென்றது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>END<<<<